## சங்க மற்றும் நாட்டுப்புற நெய்தல் நிலப்பாடல்களில் 'பெண்' கருத்தாக்கம்

- முனைவர் மு. கற்பகம்

உதவிப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை – 09.

நம் பழந்தமிழ் இலக்கியங்கள் தொட்டு நாட்டுப்புற இலக்கியங்கள் வரை அனைத்தும் மானுட சமூகத்தின் அக மற்றும் புற வாழ்வின் எதார்த்தங்களையும் மிகையினையும் நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற பலனெறி வழக்கினும் என்ற அடிப்படையில் விளக்குகின்றன. இதனை நாவலர் சோமசுந்தர பாரதியார் "உலகியலை ஒட்டி உயர் குறிக்கோளோடு சுவைபடக் காட்டும் 'பொருநு' வகை மரபுகளோடும் உலகமக்களின் ஒழுகலாற்றொடும் சிறப்புறப் புலவரால் அமைக்கப்படும் அகத்திணை மரபுகள்" என்கிறாh.; இவ் அகத்திணை மரபுகளுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலமக்களின் வாழ்வியல் சித்திரிக்கப்படுகின்றன. அவற்றில் நெய்தல் என்று சுட்டப்படுகின்ற கடலும் கடல் சார்ந்த பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைமுறை என்பது இரங்கத்தக்கதாகவே இருக்கின்றது. முகத்தைக் கடலுக்கும் முதுகினை நிலத்திற்கும் காட்டி வாழ்கின்ற இம்மக்களின் வாழ்விலும் ஏற்ற இறக்கங்கள் உண்டு. இவர்களது வாழ்வியலை

"விடிவெள்ளி நம் விளக்கு – ஐலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஐலசா
அடிக்கும் அலையே நம்தோழன் - ஐலசா
அருமை மேகம் நமதுகுடை – ஐலசா
தொழும் தலைவன் பெருவானம் - ஐலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் - ஐலசா (நா. இ. ஆ. ப. 55)

"சட்டை மேல சட்டை போட்டு
சரிகைச் சட்ட மேல போட்டு
எந்தச் சட்ட போட்டாலும்
எடுக்கணுமே உப்புப் பெட்டி" (த. நா. பா. ப. 55)

"வெள்ளி நிலாவே விளக்காய் எரியும் கடல்தான் எங்கள் வீடு

முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும் இதுதான் எங்கள் வாழ்க்கை"

என்ற வரிகள் பறைசாற்றுகின்றன. மண்ணீரும் ஆகாத கடல் நீரே அவர்களது வாழ்க்கைக் களமாகத் திகழ்கிறது.

இத்தகு வாழ்வியலைச் சித்திரிக்கின்ற இலக்கிய மரபில் ஆண், பெண் பற்றிய கருத்தாக்கங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள் பெண் குறித்த கருத்தாக்கத்தினை ஆராய இவ் ஆய்வு முற்படுகின்றது.

இவ்வுலகியலில் அடிப்படையான சிலவற்றுக்கு இருமை எதிர்வுகள் உண்டு. இவ் இருமை எதிர்வுகளில் சிற்சில மாறுபாடுகள் உண்டே ஒழிய ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்படுவதில்லை. ஒன்று மற்றொன்றிக்கு மாறாக இருப்பது. . ஆனால் ஆண், பெண் இருமையில் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்படுகின்றன.

"பெண் பிறப்பதில்லை உருவாக்கப் படுகிறாள்" என்ற கூற்றிற்குச் சான்றுகளாக நம் இலக்கண இலக்கியங்கள் திகழ்கின்றன. ஏனெனில் பெண் என்பவள் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாக விளங்குகின்ற 'குடும்பம்' என்ற அமைப்பினைக் கட்டிக்காக்கும் ஒருபொருளாகவே வார்த்தெடுக்கப்பட்டுள்ளாள். இத்தகு பெண்ணின் இயல்பு குறித்தக் கருத்தாக்கத்தினை முதன்முதலில் கட்டமைத்தது தொல்காப்பியமே.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற் குரிய" (பொருள்: 96)

என்கிறது. நாணம் மடன் கற்பு என்பன மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன. (பொருள்: 106, 111, 198). ஊயிரைவிட நாணும் நாணைவிட கற்பும் பெண்ணுக்கு மேலானதாகச் சுட்டப்படுகிறது. இப்பண்புகள் அனைத்தும் பெண்ணிற்கு அணிகலன்களாக இருப்பதன் பொருட்டே எந்த ஒன்றுக்கும் 'எதிர் மொழிதல் அருமைத்தாகக்' காட்டப்படுகிறது. உரையாசிரியரோ (தொல்: பொருள்: 96) "அச்சமும் நாணும் பேதைமையும் இம்மூன்றும் நாடோறும் முந்துறதல் பெண்டிற்குரிய இயல்பு" என்கிறார். "பெருமை உரன் என்பது ஐம்புலன் எனும் யானையை அடக்கும் (அங்குசம்) தோட்டி. இரண்டும் சிறப்பாக ஆணிடம் அமையும் போது பெண்மனம் அவனைத் தன்னுள் குடியேற்றும். அவளோ அச்சத்தால் நாணத்தால்

அவற்றோடு கலந்து நிற்கும் மௌன அழகால் சீர்மிகு சிறப்பால் நன்னராட்டி ஆகின்றாள்". அச்சத்தால் நாணத்தால் உள்ள பெண் மனதில் ஆணைக் குடியேற்ற அவனோ அவளை தன் உடைமைப்பொருளாகவே கருதுகிறான். பெருமை மிகுந்த ஆணின் கைப்பாவையாகவே நாணம் மிகுந்த பெண் படைக்கப்பட்டுள்ளாள். மேலும்

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்

மெல்லியல் பொறையும் நிறையும் (பொருள்: 150)

நிறைந்தவளாகப் பெண் இருக்க வேண்டும். இவ் இயல்புகளை மீறும் போது அவள் 'பெண்மகன்' (தொல்: 648) என்று சுட்டப்படுவதுண்டு. ஆக கட்டுப்பாடின்றி இருத்தல் ஆண்மக்களுக்கு என்றும் கட்டுப்பட்டு ஒழுகுதல் பெண்மக்களுக்கு என்றும் விதிவகுக்கப்பட்டுள்ளது. இதற்கடுத்த நிலையில் பொதுவாகப் பெண்ணின் இயல்பு குறித்து

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பாலான" (பொருள்; 206)

என்று விளக்கப்படுகின்றது. இதற்கு இளம்பூரணர் (பொருள்: 206) "செறிவு – அடக்கம், நிறைவு என்பது – அமைதி, செம்மை என்பது – மனங்கோடாமை, செப்பு என்பது – சொல்லுதல், அறிவு என்பது – நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிதல், அருமை என்பது – உள்ளக்கருத்தறிலருமை, இவையெல்லாம் பெண்பக்கத்தன" என்கிறார். தே. ஆண்டியப்பன் (ப. 259) "ஒன்றை எடுத்துரைக்கவும் (வழ pசநளநவெ) பிறர் சார்பில் எடுத்துரைக்கவும் (வழ சநிசநளநவெ) திறன் பெற்று இலங்கினர் என்பது உண்மை" என்கிறார். இக்கூற்றினை நோக்குமிடத்து இருவெறு நிலைகளில் பெண் குறித்த கருத்தாக்கம் கட்டமைக்கப்பட்டுள்ளன என அறியலாம். இதனை தலைவி ஃ நற்றாய், தோழி ஃ செவிலி என்ற நிலையில் அறியமுடிகிறது. ஏனெனில் மேற்சுட்டிய ஆண்டியப்பனார் சுட்டும் இயல்பு பெரும்பான்மையும் தோழி மற்றும் செவிலிக்கு உரியனவாகும். எந்த ஒன்றையும் தெளிவாக எடுத்து மொழியும் ஆற்றல் அனைத்து காலத்திற்கும் உரிய நல்லனவற்றை உரைத்தலும் அல்லனவற்றைக் கடிதலும் (பொருள்: 151) இவர்களுக்குரியனவாகும். இவ் இருவெறு கருத்தாக்கங்களையும் இலக்கியங்களில் காணமுடிகிறது. இவ்வாறான கருத்தாக்கங்கள் இருப்பினும் சமூக வாழ்வில் குறிப்பாக ஆணின் வாழ்விற்கு ஆணிவேராகப் பெண்ணே இருக்கிறாள் என்பதனை மீனவர் பாடல்வரிகள் காட்டுகின்றன.

"பழத்தை நம்பி – ஏலெலேர் நீயிருக்க – ஐலசா

உன்னை நம்பி – ஏலெலேர் நானிருக்கேன் – ஐலசா (நா.இ.ஆ.ப.54)

என்று ஆண் பாடுகிறான்.

**நெய்தல் நிலப் பாடல்களில் பெண் கருத்தாக்கம்:**

சங்க மற்றும் நாட்டுப்புற இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் மேற்சுட்டிய கருத்தாக்கங்களின் குறியீடாகவே பெண் சித்திரிக்கப்பட்டுள்ளாள். இப்பெண்கள் இல்லறப் பணிகளைச் செய்வதோடு கடலில் இருந்து கொண்டுவருகின்ற மீன்களைப் பிற இடத்தில் கொண்டு விற்றல், மீன் உணக்கல், உப்பு விளைவித்தல், விளைந்த உப்பினைப் பண்டமாற்றுமுறையில் விற்று நெல்பெற்றுவரல் முதலான பணிகளைச் செய்கின்றனர். இத்தகுமுறையிலான வாழ்க்கையில் குறிப்பாகக் களவு வாழ்வில் பெண் ஏக்கம் நிறைந்தவளாகவும், அச்சம் நிறைந்தவளாகவும், பழிக்கு அஞ்சுபவளாகவும் போராட்டம் மிகுந்தவளாகவும் காட்டப்படுகின்றாள்.

**ஏக்கம்:**

உளவியல் அடிப்படையில் பெண் அன்பு நிறைந்தவள். அத்தகு அன்பு நிறைந்த பெண் ஓர் ஆண்மகனிடம் அன்பு செலுத்தும் போது அது காதல் உணர்வாக மாறுகிறது. அத்தகு காதலனைத் தன் உயிருக்கும் மேலாக நேசிக்கிறாள். அவன் சிறிது பிரிந்தாலும் பூவிடைப் படினும் ஆண்டு கழந்தன்ன வாடும் அன்றில் போல ஆகின்றாள். அப்பிரிவு அதிகமாகும் போது அவள் மிகவும் ஏக்கத்துடனே காணப்படுபவளாக இலக்கியங்கள் காட்டுகின்றன.

பெண்களைப் பொருத்த மட்டிலும் அவர்களுக்கு இல்வாழ்க்கைதான் உலகம். இல்வாழ்க்கையைக் காட்டிலும் வேறுபொருள் உண்டோ? எனின் நிச்சயம் இல்லை என்பதாகவே வார்க்கப்பட்டுள்ளனர். தலைவனின் பிரிவினால் ஏங்கும் ஏக்கம் பல்வேறான இடத்து வெளிப்படுகின்றன.

"எவள்செய் தனள்இப் பேரஞர் உறுவியென்று

ஒருநாள் கூறின்றும் இலரே" (நற்: 130)

யாம் உற்ற துன்பமோ இக்கடலைவிடப் பெரிதாக உள்ளது. என் துன்பத்திற்கு வேறு யாரும் துணையாக இருக்க முடியாது. இனி எவ்வண்ணம் உய்வேன்" என்று ஆணின்றி பெண் இருக்க இயலாதென்பது காட்டப்படுகிறது. மற்றோரிடத்து தலைவன் பொருள் வயிற் பிரிந்தான்.

அப்போது பிரிவு ஆற்றாளாகிய தலைமகள் தன் பிரிவுத் துயரைத் திங்கள்மேல் ஏற்றிச் சொல்கின்றாள்.

“பால்முகந் தன்ன பசுவெண் ணிலவின்
மால்பிடர் அறியா நிறையுறு மதியம்
சால்பும் செம்மையும் உடைய ஆதலின்
நிற்கரந்து உறையும் உலகம் இன்மையின்
எற்கரந் துறைவோர் உள்வழி காட்டாய்” (நற்: 196)

என்று தன் காதலன் பற்றிய உண்மையை அறிந்தும் உணர்த்தாமல் மறைக்கின்ற காரணத்தினால் வாடிய என்தோள் போல வாட்டமுற்று நாள் தோறும் சிறுகச் சிறுகக் குறைந்து அழிந்து போகிறாய் என்றும் அறிந்தும் அறியாததுபோல இருக்கும் நீ அழிந்துபடல் இயல்பன்றோ? என்றும் சுட்டப்படுவதில் பெண்ணின் பேதைமை காட்டப்படுகிறது.

தலைவன் குறித்த காலத்தில் வந்து அவளைத் திருமணம் செய்யாத காரணத்திற்காகவே அவள் மெலிகின்றாள்.

“ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே
எல்லியும் பூவீ கொடியின் புலம்பு அடைந்தன்றே
……………………………………………………
மாயாக் காதலொடு அதர்படத் தெளித்தோர்
கூறிய பருவம் கழிந்தன்று” (நற்: 218)

ஆண், காதலில் காலம் தாழ்த்துபவனாகவும் பெண் அவனது பிரிவுத்துயரினால் வருந்துபவளாகவும் காணப்படுகிறாள். ‘பனைமடலில் இருந்து தன் துணையை அழைக்கின்ற அன்றில் பறவையின் குரலைக் கேட்டுத் தனிமையில் தவித்திருப்பது எப்படி? எவ்வாறு நான் மனம் ஆறுதல் கொள்வேன்’ என இரவு நேரத் தனிமையின்போது தலைவனைத் தேடுபவளாகவும் ஆற்றாமையில் புலம்புபவளாகவும் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளாள்.

ஆற்றாமை, காத்திருப்பு அதன்பொருட்டு ஆண்மகனின் அன்பிற்கு ஏங்குதல் என்ற நிலையில் இருந்தாலும் அவன்மீது அதிக நம்பிக்கையுடன் காத்திருக்கும் இயல்புடையவளாகவும் பெண் படைக்கப்பட்டுள்ளாள்.

“நீல்நிற விசும்பின் மீனொடு புரையப்

பைபய இமைக்குந் துறைவன்

மெய்தோய் முயக்கம் காணா ஊங்கே” (நற்: 199)

பெண் நாரை இரவெல்லாம் துயரம் தாங்காமல் குரல் கொடுக்கும் கொடுமையைக் கேட்டும் உயிர்விடாமல் அள்ளல்குளம் போன்ற உடைந்த என் மனம் அவர் வருவார் என்ற நம்பிக்கையால் துயரத்தில் காத்துக்கிடக்கிறது எனுமிடத்து ஆண்மகன் மீது கொண்ட நம்பிக்கையே பெண்ணை உயிர்வாழும் சூழலுக்கு நகர்த்துகிறது. இல்லையெனில் பெண் உயிர் வாழத்தகுதியற்றவளாக ஆகிவிடுகிறாள். அம்மட்டுமன்றி தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தலைவனோடு இருக்கும் மகிழ்விற்கான எதிர்பார்ப்பும் பெண்ணிடம் அதிகமாகிறது.

“கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்

முதிரா ஞாயிற்று எதிர்ஒளி கடுக்கும்

கானலம் பெருந்துறைச் சேர்ப்பன்” (நற்: 219)

ஆகிய தலைவன் தனியனாக வந்து என்னைக் கூடினான். இனியும் அவ்வாறே வருவான் என்ற நம்பிக்கையில் இருக்கின்றேன். எனவே தலைவன்பால் சினம் கொள்ளாதே என்று தோழியிடம் கூறுவதன் வாயிலாக ஆண்மகன் மீது அவள் கொண்ட நம்பிக்கை புலப்படுகிறது. ஆனால் அவன் அத்தகு நம்பிக்கைக்கு உரியவனாக இருக்கிறானா? என்ற வினாவும் எழுகின்றது.

இவ்வாறே சங்க இலக்கியம் போன்று நாட்டுப்புற நெய்தல் பாடல்களிலும் காதலனைப் பிரிந்து இருக்கும் ஒரு பெண் காதலனை மறக்க முடியாமல் துன்பப்படுபவளாகக் கருத்தாக்கம் செய்யப்படுகிறாள்.

“மறந்தாலும் மறந்திடுவேன்

மருந்து தின்னால் ஆறிடுவேன்

மறந்தே இருப்பதற்கு – சண்டாளா

மதி இருக்கக் கூடுதில்லை” (நா.இ.ப. 200)

என்கிறாள். மேலும் ஆண்மகன் வருவான் தன்னைக் கரம்பிடிப்பான் என்ற நம்பிக்கையில் காத்திருத்தல் திணைமரபிற்கு மட்டுமல்ல நாட்டுப்புற மரபிலும் சுட்டப்படுகின்றது.

“கறியவடி பொறியமிர்தம் - ஏலெ

கண்ணாளன் வருவானென்னு - ஏலெ

கண்ணாளன் வருவானென்னு - ஏலெ

காசிபணம் தருவானென்னு – ஏலெ (அம்பாப்பாட்டு: ப.16)

பெண்கள் சங்ககாலம் தொட்டு இன்றளவும் பிரிவின் வேதனையை பெரிதும் அனுபவிக்கக் கூடிய சூழ்நிலையிலேயே உள்ளார்கள் என்பது தேற்றம். மேலும் அன்று தொட்டு இன்றுவரை ஆணின் அன்பிற்காக ஏங்குகின்றவளாகவே பெண் என்பவள் உருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறாள். ஆணைப்பிரிந்த பெண்

“ஆல மரமுறங்க ஆடிமரத்துக் கொப்பசைய

ஊரு உறங்காதோ உங்கமடி நானுறங்க” (மூங்கில் இலைமேலே: ப.76)

என்று அவன் பிரிவின் வேதனையுடன் பாடுகிறாள். இதன் வாயிலாக ஆண் சமூகம் தனக்குச் சாதகமாகவே பெண் இருக்க வேண்டும் என்ற நோக்கில் கட்டமைத்திருக்கிறது என்பதனை அறியமுடிகிறது.

**அச்சம்:**

ஆற்றாமையில் வந்த ஏக்கம் ஒருபுறம், தலைவன் மீது உள்ள நம்பிக்கை ஒருபக்கமாக இருப்பினும் சிறுசிறு நிகழ்வுகளுக்கெல்லாம் அஞ்சும் இயல்பு வாய்ந்தவளாகவே பெண் இருப்பதாகக் காட்டப்படுகிறது. ஏனெனில் பெண்ணிற்கான இலக்கணங்களுள் அச்சமே தலையாயதாக இருக்கின்றது. பகல்பொழுதின்போது கண்ட கனவிற்குக்கூட அஞ்சம் மெல்லியளாக இருப்பதாகப் படம்பிடித்துக் காட்டப்படுகிறாள். இதனைத் தலைவன் பொருள்வயிற் பிரிகிறான். உள்ளூர் மாமரத்தில் தூங்கிக் கொண்டிருந்த வெளவால் மிகத் தொலைவில் உள்ள அழிசி என்பவனது காட்டில் உள்ள நெல்லிக்கனியைச் சுவைப்பதுபோல் கனவு கண்டது. அதுபோல தலைவியும் தலைவனுடன் சேர்ந்து மகிழ்ந்தது போல கனவு காண்கிறான். இருப்பினும் இந்த இருகனவுகளும் பகற்பொழுதில் நிகழ்ந்தமையினால் பயனற்று ஒழிந்து போகுமோ என அஞ்சுவதனை நற்றிணையின் (87) வழியாக அறியமுடிகிறது.

**பழிக்கு அஞ்சல்:**

“பெருமையும் உரனும் ஆடூஉ மேன” (தொல் பொருள்: 95)

என்கிறது தொல்காப்பியம். இதற்கு விளக்கம் அளிக்கும் உரையாசிரியர் ‘பழிபாவங்களுக்கு அஞ்சி ஒழுகுதல்’ என்கிறார். ஆனால் உண்மையில் அக இலக்கியங்களை நோக்குமிடத்துப் பழிக்கு அஞ்சக் கூடியவளாக இருப்பது பெண்ணே. இயற்கைப் புணர்ச்சியில் ஈடுபட்ட ஆண்

மாலைப்பொழுதில் அவளை நினைக்காமல் பிரிந்து சென்றான். அவளது நிலையினைக் கண்டோர் முருகு அணங்கால் அவளுக்கு நோய் ஏற்பட்டது என்கின்றனர். இதனை

"…….. பன்னாள்

வாழலேன் வாழி தோழி என்கண்

பிணிபிறது ஆகக் கூறுவர்

பழிபிறிது ஆகல் பண்புமார் அன்றே" (நற்;: 117)

என்ற வரிகள் காட்டுகின்றன. மற்றோரிடத்து

இயற்கைப் புணர்ச்சியில் ஈடுபட்டத் தலைவன் திருமணம் செய்து கொள்ளாமல் வந்து வந்து போகிறான். அதற்கு வருந்திய தலைவி

"கடல்அம் காக்கைச் செவ்வாய்ச் சேவல்

………………………………………….

கடுஞ்சூல் வதிந்த காமர் பேடைக்கு

இருஞ்சோற்று அயிரை தேரிய தெண்கழிப்

பூவுடைக் குட்டம் துழவும் துறைவன்" (நற்: 272)

ஆகிய தலைவனுடன் இல்லறம் நடத்த விரும்புகிறாள். ஆனால் அவள் எண்ணம் இதுவரை நிறைவேறவில்லை. அந்த ஊரில் வாழும் மகளிரோ பழிதூற்றுகின்றனர். பிரிதலினால் உண்டாகும் துயரத்தைக் காட்டிலும் பழியினால் படும் துயரம் பெரிதாக உள்ளது என்கிறார். அம்மட்டுமன்றித் தனக்கு வருகின்ற பழிச்சொல்லுக்கு அஞ்சுவதோடு தலைவன் மீது ஏற்படுகின்ற பழிச்சொல்லுக்கும் அஞ்சும் இயல்பு பெண்ணிற்கே உரிய ஒன்றாக இருக்கின்றது. ஏனெனில் அவனைத் தன்னில் இருந்து பிரித்தறியா இயல்பு வாய்ந்தவளாகவே இருக்கின்றாள். மாலைப்பொழுதும் வந்துவிட்டது. அதனைக் கண்டும் மீண்டு வருதலில் விருப்பம் இல்லாமல் இருக்கின்றார். அவர்தம் பிரிவினால் உயிரே அழிந்து போவதானாலும் கவலை இல்லை. கடற்கரை பரவியிரக்கும் ஊருக்கு உரியவனான தலைவன் வெட்கப்படும்படி அவனைத் தூற்றுகின்ற பழிச்சொல் மிகுதியாக நம்மையும் தாக்குகின்றது. பிறர் கண்களுக்கு நம் துயரம் எவ்வாறேனும் மறைக்கப்பட வேண்டும் என்கிறாள் தலைவி (நற்: 382)

இத்தகு பழிச்சொல்லிற்கு அஞ்சியே பெண் தன் காதலைச் சொல்லாமல் மறைப்பதுண்டு. ஏனெனில்

"தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்

எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை" (தொல்: பொருள்)

என்று வரையறுத்தமையினாலே தலைவி

"நோய்அலைக் கலங்கிய மதன்அழி பொழுதின்

காமஞ்செப்;பல் ஆண்மகற்கு அமையும்" (நற்: 94)

என்கிறாள். ஆக பெண் தன் காதலை வெளிப்படுத்தக்கூடாது என்னும் கருத்தாக்கம் பெறுகிறது. அவ்வாறெனில் அவளது விருப்பத்தினை எவ்வாறு வெளிக்காட்டுவது எனில்

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்கு

கூட்டி உரைக்கும் குறிப்புரை" (தொல்: பொருள்: 7)

யாகவும் புது மட்கலத்தில் பெய்த நீர் புறம்பொசிந்து காட்டுவதைப் போலவும் காட்டவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் ஆண்மகனுக்கு இத்தகு கட்டுப்பாடு கட்டவிழ்ந்து விடப்பட்டிருக்கிறது. பெண் தன் விருப்பத்தினை உள்ளப்புணர்ச்சியினை நளினமாகவே காட்டுகிறாள். ஆனால் ஆண்மகனோ மெய்யுறு புணர்ச்சியினை எதிர்நோக்குகிறான். இதனால் ஏங்குகின்ற பழிபாவம் பெண்களுக்கு உரியதாகவே கட்டமைக்கப்படுகிறது. இது இன்றும் சமூகத்தில் காணப்படுகிறது.

"பாண்டிப் பெண்ணே பகவதியே – ஏலேலோ! ஏலதண்டு

பாக்குத்தந்த நோக்க மென்ன – ஏலேலோ! ஏலதண்டு

இங்ஙனம் குறிப்பாகக் காட்டிய உள்ளப்புணர்ச்சிக்குத் தலைவன் மெய்யுறு புணர்ச்சியினை எதிர்நோக்குகிறான்.

"முத்துப் பெண்ணே! மோகனமே – ஏலேலோ! ஏலதண்டு

முத்தம் தந்தால்! மோசமென்ன? – ஏலேலோ! ஏலதண்டு

என்று ஆண் மகன் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி கேட்கிறான். ஆனால் பெண்ணோ பழிபாவங்களுக்கு அஞ்சுகிறாள்.

"முத்தம் தந்தால் மோகம் வரும் – ஏலேலோ! ஏலதண்டு

மூன்று ஜென்மம் தோஷம் வரும் – ஏலேலோ! ஏலதண்டு

குலமழிந்த பெண்ணு என்று – ஏலேலோ! ஏலதண்டு

குவலயத்தில் கூறுவரே – ஏலேலோ! ஏலதண்டு

மனமழிந்த பெண்ணு என்று – ஏலேலோ! ஏலதண்டு

மானிடவர் பேசுவாரே – ஏலேலோ! ஏலதண்டு

எகத்தாளம் பண்ணுவாரே – ஏலேலோ! ஏலதண்டு"

என்று அவள் கூறிய பின்பும் அவனோ

"கூடுவமா? பேசுவமா? – ஏலேலோ! ஏலதண்டு"

என்கிறான்

பேச்சியென்று பேரெடுத்தால் – ஏலேலோ! ஏலதண்டு

பிழைவந்து சேருமம்மா – ஏலேலோ! ஏலதண்டு

அடங்காத பெண்ணு என்று – ஏலேலோ! ஏலதண்டு

அழிம்பு வந்து சேருமம்மா – ஏலேலோ! ஏலதண்டு" (அம்பா பாட்டு: ப. 138)

என்று பெண்ணினால் மட்டுமே குலம் கெடுவதாகக் கருத்தாக்கம் செய்யப்படுகிறது. ஆண்மகன் செய்யும் செயல்பாடுகள் பிடிக்காது இருப்பினும் பெண் தன்மையால் சகித்துக் கொண்டு வாழவேண்டும் என்ற கோட்பாட்டினையும் உருவாக்கியுள்ளது இச்சமூகம். இதனை

"யான்என் பெண்மை தட்ப நுண்ணிதின் தாங்கி" (நற்: 94)

என்கிறாள் தலைவி. ஏனெனில் சகிப்புத்தன்மை இல்லாதவள் நல்ல பெண் அல்ல என்பதும் பெண் நல்லவளாக இருந்தால் மட்டுமே குலத்திற்கு பெருமை என்பதும் கற்பிக்கப்படுகிறது. இதனை

"பெண்கொடியும் நன்கொடியாம் - அய்லெசா

பெருமை செய்யும் நல்லவர்க்கு – அய்லெசா" (அம்பாபாட்டு: ப. 161)

என்ற வரிகள் காட்டுகின்றன. ஆண்மகன் எத்தகு துன்பம் செய்திருந்தாலும் இழைத்தத் துன்பத்தையெல்லாம் மறந்து அவனை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன.

சிறைப்புறமாகத் தலைவன் நிற்க வற்புறுத்தியத் தோழிக்குத் தலைவி கூறுகிறாள்.

"செந்நெல் அரிஞர் கூர்வாட் புண்ணுறக்

காணார் முதலொடு போந்தெனப் பூவே

…………………………………………

தெறுகதிர் இன்துயில் பசுவாய் திறக்கும்

பேதை நெய்தற் பெருநீர்ச் சேர்ப்பற்கு" (நற்: 275)

யான் படுகின்ற துன்பம் தலைவனால் ஏற்பட்டது என்று அறியாமல் அவனை வெறுத்தேனும் இல்லை. அறன் இல்லாத அவன் என்னை மீண்டும் அழைப்பானாகில் அதனையும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக உள்ளேன் என்கிறாள். இவ்வாறே ஆணிடம் ஃ ஆணினால் அல்லல் உறுகின்ற நிலைப்பாட்டிலேயே பெண்கள் இருப்பதனை மீனவர் பாடல்கள் காட்டுகின்றன. இருப்பினும் அவ் அல்லலுக்கு வடிகாலாக இருக்கும் ஒரே இடம் பிறந்த வீடு என்பதே

"தாங்க முடியாமலே – ஏலெ

தாய்வீடு போறேனென்னா – ஏலெ

பொறுக்க முடியாமலே – ஏலெ

பொறந்த எடம் போறேனென்னா – ஏலெ" (அம்பாபாட்டு: ப.170)

ஆனால் திணைமரபில் இது இல்லை.

**கற்பிதம், இயலாமை, போராட்டம் நிறைந்தவள்:**

பெண்ணைக் கற்பிம் நிறைந்தவளாகவும் இயலாமை நிறைந்தவளாகவும் இலக்கியங்கள் சித்திரித்துக் காட்டுகின்றன. இரவில் உறங்காது வருந்தும் தலைவி

"மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்

துணைபுணர் அன்றில் உயவுக்குரல் கேட்டொறும்" (நற்: 303)

என் காதலி என்னை நினைத்துக் கண்ணுறங்காது வருந்துவாள் என்று எண்ணுவாரோ? தெரியவில்லையே என்று அவளாகக் கற்பிதம் பண்ணுகிறாள்.

தலைவனை நினைந்து வருந்தும் தலைவி தன் துன்பத்தினை மறைக்கத் தெரியாத இயலாமையில் தவிப்பதனை (நற்: 338) நற்றிணைக் காட்டுகிறது. தலைவன் பிரிவால் வாடிய என் புறத்தோற்றத்தைப் பார்த்து ஊரார் தூற்றும் பழிச்சொல் ஏற்படாதபடி தோற்றமளிக்க வேண்டும் என்று சொல்கின்றாய். பனை ஓலையில் உள்ள ஆண்நாரை, பெண்நாரை வந்து தனக்கு இன்பம் தரும்வரையில் துயரத்தால் வாடும் நாரையினைப்பார். இந்தச் சூழலில் என்

துயரத்தை மறைக்கச் சொல்கிறாயே. அதை என்னால் தாங்க இயலவில்லை என்று தோழியிடம் கூறுவதன் வாயிலாக பெண் கற்பிதம் மற்றும் இயலாமை நிறைந்தவளாகக் காட்டப்படுகிறாள்.

மேலும் பெண் குலப்பெருமை, பழிச்சொல், தலைவன்மீது உள்ள அன்பு என்ற பல்வேறான காரணங்களுக்காகத் தனக்குள்ளே போராட்டம் நிகழ்த்துகிறாள்;. தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று விட்டான். ஆற்றாமையில் தவிக்கிறாள்.

"…………………………………….

கானே, பூமலர் கஞலிய பொழில்அகம் தோறும்

தாம்அமர் துணையொடு உண்டுஇமி ரும்மே" (நற்: 348)

யானோ மெலிவடைந்த காரணத்தினால் அணிகலன்கள் கழன்று விழும் அளவிற்கு மெலிந்து இரவு நேரங்களில் கண்துயிலாது வாடியும் உள்ளேன். இந்த உலகம் அதனோடு சேர்ந்து மகிழவில்லை என்று என்னுடன் போராட்டம் நடத்துமோ, என் நெஞ்சம் வருத்தம் மிகுதியினால் உலகோடு போராட்டம் நடத்த முற்படுமோ என்று தெரியவில்லை என்கிறாள். மேலும் இன்ப உணர்வு மேலோங்கும் வேளையில் என்ன செய்வதென்று அறியாது தவிப்புடன் போராட்டம் நடத்தும் இயல்பினளாகவும் பெண் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

தலைவனுடன் இன்பம் துய்த்து அவன்பால் மனம் பறிகொடுத்த நான், காமம் தணியும் வகை தெரியாமல் பெரும்பொழுது, எதிர்பொழுது, பகல்போகும்பொழுது புறந்தொழுது நிற்கின்றேன் (நற்: 187) என்கிறாள். மேலும் மாலைப்பொழுது வருமானால் இமயமலையிலிருந்து பொங்கிவரும் கங்கை நதியானது கரையை இடித்துப் பெருகிவரும் வெள்ளத்தைப் போன்றதான என் காம வெள்ளம் நீந்துதற்கும் நீந்திக் கரையேறுவதற்கும் எனக்குத் தெரியவில்லை. இனி நான் எவ்வாறு உயிர்வாழ்வேன் என்று கூறுகிறாள்(நற்: 369).

தலைவி என்ற பெண்ணிற்கு ஏற்படுகின்ற ஏக்கம், இயலாமை, போராட்டம், அன்புமிகுதி, பழிபாவங்களுக்கு அஞ்சுதல் ஆகிய எதுவாக இருந்தாலும் அவைகளைத் திணைமரபில் தலைவனிடம் நேரிடையாகச் சொல்லுதல் என்பது திணைமரபில் கிடையாது. ஆனால் நாட்டுப்புறமரபில் இம்மரபு மாற்றப்பட்டுள்ளது. திணைமரபில் தலைவி என்ற பெண்ணிற்கு மாற்றாகத் தோழி என்ற பெண் படைக்கப்பட்டிருக்கின்றாள். ஓர் ஆண்மகனின் முன்னால் பெண் என்பவள் பேசுதல் கூடாது எனற கருத்தாக்கத்திற்கு மாறாகத் திகழ்பவளாகத்

தோழி உள்ளாள். ஆவளால் மட்டுமே தலைவனிடம் நேரிடையாகப் பேசவும் கண்டிக்கவும் முடிகிறது.

குறைவேண்டிய தலைவனைத் தோழி தம் குலச்சிறுமையினைச் சொல்லி சேட்படுத்துகின்றாள்.

"இவளே கானல் நண்ணிய காமர்சிறுகுடி
நீலநிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீன்எறி பரதவர் மகளே" (நற்: 45)

நீயோ பழைய ஊரின்கண் உள்ள தேரையுடைய செல்வ மன்னனின் மகன். ஆதலின் குலப்பெருமை எமக்கில்லை என்று கூறி மறுக்கிறாள். இன்னும் பரதவர் பெண்கள் செய்கின்ற பணிகள் சுட்டப்பெற்றுள்ளன. சுறாமீனை அறுத்து வெயிலில் உணக்கி அவைகளைக் காக்கைகள் கவரா வண்ணம் காக்கின்ற எம்மேனியில் புலவுநாறும். நீ இந்த நாற்றத்தைப் பொறாயாகலின் எம் அருகில் வாராதே. எம் எளிய வாழ்க்கை நும்மோடு பொருந்தாது என்றாலும் எம்மனோரிலும் செல்வவாழ்க்கை படைத்த ஆண்மக்கள் உண்டு என்பதை அறிவாயாக என்று துணிவோடு கூறும் மதிநுட்பம் நிறைந்தவளாகவும் தலைவனின் தகாத செயல்களைக் கண்டிக்கும் இயல்பு வாய்ந்தவளாகவும் துணிந்து முடிவெடுக்கும் செயல்திறம் மிகுந்தவளாகவும் கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ளாள்.

நம் ஊர் தெருவில் உள்ள பெண்கள் சிலரும் பலரும் அங்கங்கு நின்று கடைக்கண்ணாலே சுட்டிக்காட்டி மூக்கின் மேலே விரலைச் சேர்த்திப் பழி கூறினார்கள். அதனால் அன்னை சிறுகோல் கொண்டு சுழலும்படியாக அடிக்கிறாள். இதனைக் கண்டு யான் பெரிதும் துன்புற்றேன்.

"புதுமலர் தீண்டிய பூநாறு குரூச்சுவல்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயலதேர்க் கொண்கனொடு" (நற்:149)

நீ உடன்செல். அதற்கு நான் இசைவு தருகிறேன். நீ சென்ற பின்னர் பெரும் ஆராவாரத்தை உடைய இவ்வூர் அலர்தூற்றி அழிந்து ஒழிவதாக என துணிவுடன் முடிவெடுக்கும் ஆற்றல் உடையவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

இவ்வாறாகப் பெண் குறித்த கருத்தாக்கங்கள் இருவெறு நிலைகளில் காணப்படுகின்றன. இருப்பினும் பெண் பிறப்புக் குறித்து, சங்கப்பாடல்களில் எந்தக்குறிப்பும் இல்லை. ஆனால் நாட்டார் வழக்காற்று மீனவர் பாடல்களில் பெண் பிறத்தலிலே உள்ள நம்பிக்கையே பெண் சிசுகொலைக்கு ஒரு காரணமாகவும் இருக்கிறது.

“மாலசுத்தி பெண் பொறந்தா – ஆத! ஏலெ!
மாமனுக்கு ஆவாதின்னா – ஆத! ஏலெ!
கோடிசுத்திப் பெண் பொறந்தா – ஆத! ஏலெ!
கொளுந்தனுக்கு ஆகாது – ஆத! ஏலெ!”

என்றும் மேலும் ஆண் மாலை சூடிப்பிறந்தால் மாமனுக்கு மட்டுமே ஆகாது. ஆனால் பெண் மாலைசூடிப் பிறந்தால் நாட்டிற்கே கேடு வந்துவிடும் என்பதனை

“மாலைசூடி பெண் பிறந்தா
மண்ணுக்கு ஆகாதம்மா” (அம்பாபாட்டு;. ப. 168- 169)

என்ற வரிகளின் வழியாக அறியமுடிகிறது. பெண்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களுக்கு மனைவாழ்க்கை அமைந்துவிடுவதில்லை. பெண் பிறந்தவுடன் இன்னார்க்கு என்று முடிவு செய்துவிடுகின்றனர்.

“மாமன் மகனுக் கென்று – ஏலெ ஏலெ
மடியிலே பெண் வளர்த்தேன் – ஏலெ ஏலெ
அத்தை மகனுக் கென்று – ஏலெ ஏலெ
அறையிலே பெண் வளர்த்தேன் – ஏலெ ஏலெ
அறையிலே வாழும் பெண்கள் – ஏலெ ஏலே
அம்பலத்தில் வாழலியே – ஏலெ ஏலெ” (அம்பாபாட்டு: ப. 74)

என்பதன் வழியாகப் பெண் பிள்ளைகள் வீட்டிற்குள்ளேயே முடக்கப்பட்டிருந்தமையினை அறியமுடிகிறது. மேலும் பெண்களை உடல்தேவையைத் தீர்ப்பவர்களாகவே காணும் போக்கும் உள்ளது. இருப்பினும் பெண்கள் சிக்கனத்துடனும் குடும்பப் பொறுப்புடனும் நடந்துகொள்ளும் எதார்த்தம் நாட்டுப்புற நெய்தல் பாடல்களில் காட்டப்படுகிறது.

“போன நல்ல வருஷத்திலே
புதுக் குணுக்கு போட்டபிள்ள

இந்த நல்ல வருஷத்திலே

ஏத்திட்டாளே வைரக்கம்மல்” (த. நா. பா. ப.435)

உப்பளத்தில் தொழில் செய்யும் பெண் பணத்தை மிச்சப்படுத்தி நகைவாங்கிய திறத்தினை ஆண் பாராட்டுகிறான். ஆண்மகன் பொறுப்பின்றி வள்ளம், வலை, கொம்பு, செம்பு என எல்லாவற்றையும் விற்றான். ஆனால் பெண்ணோ எத்தகு துன்பம் வந்தாலும் பொறுப்புடன் இருப்பதனை

“சோலையிலே அவ கிடந்து சுட்ட நண்டுக்கால் பெறக்கி

கால் வழியே ஓடுதம்மா கடிக்குதம்மா கட்டெறும்பு (த. நா. பா. ப. 449)

என்னும் வரிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

நாகரீகவளர்ச்சி, சமஉரிமை போன்ற கருத்தியல்கள் இருப்பினும் சங்ககாலம் தொட்டு இன்றளவும் ‘பெண்’ குறித்தக் கருத்தாக்கங்கள் இருவேறு நிலைகளில் ஒன்றாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. இவ் இருவேறு நிலைகள் குறித்தக் கருத்தாக்கத்திற்கான காரணம் என்பது ஆதிக்க மற்றும் அடித்தளச் சமூகம் என்ற நிலைப்பாடே. இது நிலவுடைமைச் சமூகத்தின் வெளிப்பாடாகும். எவ்வாறாயினும் திணைமரபு மற்றும் நாட்டுப்புற நெய்தல் நிலப் பாடல்களில் பெண் என்பவள் ஏக்கம், அச்சம், பழிக்கு அஞ்சல், குலப்பெருமையைப் பாதுகாத்தல், எண்ணங்களை வெளிப்படுத்துவதில் தயக்கம் என்பனவற்றோடு சிக்கனம், தவறுகளைச் சுட்டிக்காட்டல் என்பன போன்ற நிலைப்பாட்டிற்குள் இயங்குபவளாகவே கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ளாள் எனில் மிகையில்லை. இது இச்சமூகத்தில் இன்றளவும் நிலைத்து நிற்கிறது.